**O.S.175 of 2020**

Date : 13.10.2025

பி.சா.1 : ஸ்ரீமன்நாராயணன்

பி.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளதால் என்னை 3 ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் வாதியின் தகப்பனாரிடம் இருந்து கிரையம் பெற்றள்ளேன் என்றால் நம்பிகோனாரிடம் இருந்து பெற்றுள்ளேன். அவர் வேலம்மாளுக்கு என்ன உறவு என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்து வெற்றிவேல் கோனாருக்கு பாத்தியப்பட்டது என்பதில் மாற்றமில்லை என்றால் சரிதான். வெற்றி வேல் உள்ளூரை சார்ந்தவர் என்றால் சரிதான். வழக்குசொத்து வெற்றி வேல் கோனாருக்கு பாகப்பிரிவினையின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வெற்றிவேலின் மனைவி பெயர் மகராசி என்பதாகும். அவர்களுக்கு நம்பி என்ற ஒரே மகன் என்றால் சரிதான். அவரை நான் பார்த்துள்ளேன். நம்பியின் அம்மா மகராசி என்பவரையும் நான் பார்த்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்காளர் அட்டையிலும் மற்றும் குடும்ப விநியோக அட்டையில் உள்ள புகைப்படத்தில் இருப்பது மகராசி என்பவர்தான். வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள புகைப்படம் வா.சா.ஆ.7 ஆகும். குடும்ப விநியோக அட்டையில் உள்ள புகைப்படம் வா.சா.ஆ.8 ஆகும். மகராசி அம்மாள் நான்குநேரியில் கதவு எண்.63 A அண்ணாசாலையில் குடியிருந்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. நம்பி என்பவர் எனக்கு நன்கு அறிமுகம் ஆனவர் என்றால் சரிதான். நம்பியையும் நான் பார்த்துள்ளேன். நம்பி நான்குநேரி அண்ணாசாலை முதல் தெருவில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள நபர் நம்பி என்றால் சரிதான். மேற்படி வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள நம்பியின் புகைப்படம் வா.சா.ஆ.9 ஆகும். குடும்ப அடையாள அட்டையில் உள்ள நம்பியின் புகைப்படம் வா.சா.ஆ.10 ஆகும். நம்பிக்கு கோதையம்மாள் என்பவர் மனைவி என்றால் சரிதான். கோதையம்மாளுக்கு மூன்று பெண் மக்கள் வாரிசுகள் என்றால் முருகம்மாள் என்ற லெட்சுமியை மட்டும்தான் தெரியும். அவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் நம்பி கோனாருடன் இருந்ததால் தெரியும். வேலம்மாள் நம்பிகோனாரின் மகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியும்.

நம்பி கோனார் 29.06.2007 ல் காலமாகிவிட்டார் என்றால் தேதி தெரியாது ஆனால் இறந்துவிட்டார். நம்பி கோனார் உடல் ஊனமுற்றவர் என்பதும் காது கேட்காது வாய் பேசமாட்டார் என்றால் சரியல்ல. கோதையம்மாளுக்கு ஒரு பெண் பிறந்து அவர் திருமணம் ஆகாமல் சிறுவயதிலேயே இறந்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெற்றிவேல் இறந்த பின்பு மகராசி குடும்ப தலைவி என்ற நிலையில் குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக மகராசி ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வேலம்மாள் என்ற வேணியால் மேற்படி உயில் எழுதியிருந்தது தெரியாத நிலையில் அசல் வழக்கு 55/2011 என்ற பாக வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் ச ரிதான். அந்த பாக வழக்கில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். அதில் கோதையம்மாளும், முருகம்மாள் என்ற லெட்சுமியும் பதில் போட்டதில் உயில் பற்றி சொல்லியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் வேலம்மாள் என்ற வேணி வழக்கை வாபஸ் பெற்று விட்டார் என்றால் தெரியும். மேற்படி உயில் பற்றி தெரிந்ததனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் 18.09.1995 ம் தேதியிட்ட உயிலின் நகல் தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி உயிலை பற்றி நான் தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி உயிலில் வழக்கு சொத்து வேலம்மாள் என்ற வேணிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தெரிந்து நான் உயில் பற்றி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி உயிலின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் ராமையா என்பவருக்கு 2012 ல் ஒரு கிரையத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த கிரையத்தின் நகல் இந்த வழக்கில் தாக்கல்செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்ட்டுள்ள உயிலை நிரூபிப்பதற்காக சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து சாட்சி வரவழைக்கப்பட்டது எனக்கு தெரியும் . பாகவழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு உயில் தெரியவந்ததால் இந்த வழக்கு காலம் கடந்தது அல்ல என்றால் சரியல்ல. நான் பெற்றுள்ள கிரையம் வாதியை கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றும் வாதிக்கு விளம்புகை பரிகாரமும், சுவாதீனப்பரிகாரமும் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. மகராசி அம்மாள் ஏற்படுத்தியுள்ள உயிலை என்னால் கேள்வி எழுப்ப எனக்கு சட்ட அருகதை இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் உயிருடன் உள்ளார்.

என் அப்பா நல்ல திடகார்த்தமாக அவருடைய வேலைகளை அவரே செய்வார் என்றால் சரியல்ல  அடுத்தவர் உதவியுடன் தான் அவருடைய வேலையை செய்யமுடியும். என் அப்பா உடல் நிலை சரியில்லாமல் இருப்பதற்கான எந்தவொரு ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பானரால் செய்யப்பட்ட செயல்பாடுகள் குறித்து 2013 க்கு முன்பு உள்ள சங்கதிகளை பொறுத்து எனக்கு சாட்சியம் அளிக்க அருகதை இல்லை என்றால் சரியல்ல.  நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சொத்தில் எனக்கு உரிமை ஏற்படாது என்றால் சரியல்ல.  28.01.1999 ம்தேதியிட்ட ஆவணம் உரிய தரப்பினரால் எழுதிகொடுக்கப்படவில்லை என்றும் எனவே பி.சா.ஆ.3 சட்டப்ப டி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா-ஆ.3   1999 ம் வருடத்திய கிரைய பத்திரத்தில் வேலம்மாள் என்ற வேணி  என்ன காரணத்திற்காக கூறப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியாது.  எனது தகப்பனார் வாங்கிய கிரையம் செல்லத்தக்கதல்ல என்ற நிலையில் நான்  வழக்கு சொத்தின் சுவாதீனத்தை வாதிக்கு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.